1981 பிப்ரவரி 9]

மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு : (அ) மற்றும் (ஆ) மாநில அரசின் செலவிலேயே சிறு ரகத் தொழில்களுக்கு மட்டும் மூலதன உதவித் தொகை அளிக்கும் வகையில் செங்கல்பட்டு மாவட்டத்தில் உள்ள மதுராந்தகம் தாலூக்கா தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கிறது. செங்கற்பட்டு, உத்திரமேரூர் தாலூக்காக்களை தொழில் துறையில் பின் தங்கிய பகுதிகளாக அறிவிக்கும் திட்டம் அரசின் பரிசீலனையில் இல்லை.

திரு. எஸ். டி. உகம்சந்த் : மாண்புமிகு தலைவர் அவர்களே, மதுராந்தகம் தாலூகாவை பின் தங்கிய பகுதியாக அறிவித்தமைக்கு நன்றியைத் தெரிவித்துக் கொண்டு, செங்கல்பட்டு, உத்திரமேரூர் ஆகிய தாலுக்காக்களில் எந்தவிதமான தொழில் முன்னேற்றமும் இல்லாததால் இதையும் பின்தங்கிய பகுதியாக அறிவிக்கப்பட வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு : பேரவைத் தலைவர் அவர்களே, நான் ஏற்கனவே இந்த அவையிலே பல தடவை சொல்லி இருக்கிறேன். மாநில அரசு 24 தாலுக்காக்களையும், மத்திய அரசு 33 தாலுக்காக்களையும் பின் தங்கிய பகுதியாக அறிவித்து இருக்கின்றன. ஏற்கனவே அரசு அறிவித்த " சப்சிடி" ஸ்கீமில் நடைபெற்றுக் கொண்டிருக்கிற இந்த வேலைகளை கூட கைவிடுவதற்கான ஒரு ஆய்வு மத்திய அரசின் பரிசீலனையில் இருப்பதாக தெரிந்தது.

நேற்றைய தினம் நடைபெற்ற மாநில தொழில் அமைச்சர்கள் மாநாட்டிலே கூட தமிழ் நாட்டின் சார்பிலே, ஏற்கனவே சென்று இருந்தவர் சப்சிடி ஸ்கீமில் சிவராமன் கமிட்டி—திரு. சிவராமன் தலைமையில் ஒரு கமிட்டி போட்டு, பெரிய நகரங்களில் 200 கிலோ மீட்டர், அந்த ரேடியஸ்லே இருக்கிற எல்லாப் பகுதிகளையும் இதிலே இருந்து நீக்குவதாக இருந்தது. அதை நாம் ஆட்சேபித்து தற்போது நடைபெறும் பணிகள் முறையாக நடைபெற வேண்டும்; மேலும் சில தாலுக்காக்களை இந்த பட்டியலிலே சேர்க்க வேண்டுமென்று கேட்டிருக்கிறோம்.

அரிசன நலத்துறை

* வினா எண் 260.—திரு. க. பாரமலை, திரு. எம் சின்னசாமி: மாண்புமிகு அரிசனநலத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) அரிசன நலத்துறை தனியாக இயங்கும் என்ற அரசின் முடிவு நடைமுறைப்படுத்தப்படவில்லை என்பது உண்மையா?

(ஆ) ஆம் எனில் விரைவில் அதை அமல்படுத்தும் உத்தேசம் அரசுக்கு உண்டா?

மாண்புமிகு திரு. எம். விஜயசாரதி : (அ) மற்றும் (ஆ) ஆதி திராவிடர் மற்றும் பழங்குடி மக்கள் நலத்துறை (முந்தைய அரிசன நலத்துறை) தனியாக இயங்க பல்வேறு விதிமுறைகளை மாற்றுவது குறித்து பரிசீலனை மேற்கொள்ளப்பட்டுள்ளது. அவை மேல் தக்க முடிவுகள் விரைவில் எடுக்கப்படும்.

திரு. எம். சின்னசாமி : பேரவைத் தலைவர் அவர்களே, இந்த பரிசீலனை முடிந்து எவ்வளவு காலத்தில் இந்தத் துறை தனியாக இயங்கும் என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எம். விஜயசாரதி : தலைவர் அவர்களே, கூடிய விரைவிலே இது பற்றிய முடிவு எடுக்கப்படும்.

திரு. எல். இளையபெருமாள் : பேரவைத் தலைவர் அவர்களே, அரிசன நலத்துறை தனியாக இயங்க முடியாத கஷ்டங்கள் என்ன இருக்கிறது என்று அறிய விரும்புகிறேன். இதற்கு முன்னே பரமேஸ்வரன் கமிட்டி, கூர்மையா கமிட்டி, வர்கீஸ் கமிட்டி போட்டிருந்தும், இது குறித்து முடிவுகள் அறிவித்து இருக்கின்ற நிலையில் அவற்றை நிறுவ முடியாத நிலைமை என்ன? இன்னும் ஒரு கமிட்டி ஏன் என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எம். விஜயசாரதி : பேரவைத் தலைவர் அவர்களே, அரிசன நலத்துறை தனியாக இயங்க வேண்டுமென்று 26—5—1979-லே அரசு ஆணையிட்டது. மாவட்ட ஆட்சித் தலைவர் அலுவலகத்திலிருந்து 15 மாவட்ட ஆதி திராவிட நல அலுவலர்கள் பதவியை பிரித்து வருவாய்த் துறையிலிருந்து ஏழு பேர்கள், அரிசன நல மாநில அலுவலகத்திலிருந்து 4 பேர்களையும், தேர்வு நிலை கண்காணிப்பாளர், கண்காணிப்பாளர் அளவில், கோட்ட வளர்ச்சி அலுவலகத்திலிருந்து 4 பேர்களையும் நியமிக்க ஆணையிடப்பட்டது.

அதுமட்டுமல்லாமல், பெரியார் மாவட்டம் புதிதாக ஆரம்பிக்கப்பட்டதால், மேலும் மற்றொரு நல அலுவலர் பதவி ஏற்படுத்தப்பட்டது. ஆதி திராவிட மற்றும் பழங்குடியினர் நல அலுவலகத்திலிருந்து தேர்வு செய்யப்பட்ட ஒரு கண்காணிப்பாளர் (திரு. டி. சுந்தரராஜ்) தேர்வு சரியல்ல என்பதை எதிர்த்து, திரு. ராஜகோபால் என்பவர் உயர்நீதி மன்றத்தில் நீதிப் பேராணை மனு தாக்கல் செய்திருந்தார். அதன் மீது முடிவு வரும் வரையில் காத்து இருக்க வேண்டியிருந்தது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. ரா. கிருஷ்ணன் : தலைவர் அவர்களே, அரிசன நலத் துறையை தனியாக ஒரு துறையாக அமைக்க வேண்டும் என்று பல காலமாக பேசப்பட்டு வருகிறது. இருப்பினும், அதை நடைமுறைப்படுத்துவதில் காலதாமதம் ஏற்படுவது ஏன் என்று

1981 பிப்ரவரி 9]

தெரியவில்லை. இதிலே நடைமுறைச் சிக்கல் என்னவென்றால், மாவட்ட நலத்துறை அலுவலர்களில் யாராவது தவறு செய்தால் அதைக் கண்டிக்க இந்தத் துறைத் தலைவருக்கு அதிகாரம் இல்லை. அவரை மாற்ற வேண்டும் என்று சொன்னால் கூட, அதற்காக வருவாய்த் துறையை நாடவேண்டியிருக்கிறது. எந்த விதமான நடவடிக்கையையும் எடுக்க முடியாத ** ** நிலையில் அந்தத் துறை இருப்பதால் அந்தத் துறையை தனித் துறையாக மாற்ற அரசு முன் வருமா?

மாண்புமிகு பேரவைத் தலைவர்: * * என்கிற வார்த்தை அவைக்குறிப்பில் இருந்து நீக்கப்பெறவேண்டும் என்று ஆணையிடு கிறேன்.

Thiru L. ILAYAPERUMAL : It is a Parliamentary word.

Mr. SPEAKER : It is not necessary to be included in this question.

மாண்புமிகு திரு. எம். விஜயசாரதி : தலைவர் அவர்களே, அந்தக் குறைகளைக் களைய வேண்டும் என்ற எண்ணத்தோடு தான் அரசு ஆராய்ந்து கொண்டு இருக்கிறது. ஐந்து குறிப்புரைகள் மீது முடிவு எடுக்கவேண்டியிருப்பதால், கூடிய விரைவில் அது பற்றி முடிவு எடுத்து, அரசு ஆவன செய்யும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திருச்சிராப்பள்ளி மத்திய சிறைச்சாலையைப் பார்வையிடல்.

*குறுகிய கால வினா எண். 6—திரு. ரா. உமாநாத் : மாண்புமிகு கூட்டுறவு-சட்ட அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சட்டப் பேரவையின் 1980 ஆம் ஆண்டு ஆகஸ்டு மாதத்தியக் கூட்டம் முடிந்தபின் கனம் அமைச்சர் அவர்கள் சில சட்டப் பேரவை உறுப்பினர்களுடன் திருச்சி மத்திய சிறைச்சாலையை பார்வையிடுவதற்காக சென்றதுண்டா?

(ஆ) அது சமயம் சிறைக்கைதிகளிடம் இருந்து பெற்ற பிரதான கோரிக்கைகள் என்ன?

(இ) அந்த கோரிக்கைகள் மீது எடுத்த நடவடிக்கைகள் யாவை?

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS